

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (4.6.2025) தலைமைச் செயலகத்தில், இந்தியாவிற்கான சிங்கப்பூர் நாட்டின் தூதர் சைமன் வோங் (Mr. Simon Wong) அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், சிங்கப்பூர் நாட்டு துணைத் தூதர் எட்கர் பெங் (Mr. Edgar Pang), அரசியல் தூதர் திருமதி. வைஷ்ணவி வாசுதேவன், செயலாளர் (அரசியல்) ஹர்ஷ்வீர் சிங் சதா (Mr. Harshvir Singh Chadha), சென்னையிலுள்ள ஒன்றிய வெளியுறவு அமைச்சகத்தின் மண்டல கடவுச் சீட்டு அலுவலர் டாக்டர் எஸ். விஜயகுமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.6.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில், அஜைல் ரோபோட்ஸ் (Agile Robots SE) நிறுவனம், 300 கோடி ரூபாய் முதலீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம், இருங்காட்டுக்கோட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் அமைத்துள்ள செயற்கை நுண்ணறிவு சார்ந்த ரோபோட்டிக் இயந்திர பாகங்கள் உற்பத்தி ஆலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்து, பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த 6 மாணவர்களுக்கு உள்ளகப்பயிற்சி (Internship) அளிப்பதற்கான கடிதங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மருத்துவர் பு.அலர்மேல்மங்கை, அஜைல் ரோபோட்ஸ் நிறுவனத்தின் துணைத் தலைவர் ரோரி சாக்ஸ்டன் மற்றும் இந்திய செயல்பாடுகள் மேலாண்மை இயக்குநர் சரவணன் சோலையப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தலைவர் கலைஞர் வழியே தமிழினத்துக்கான கிழக்கு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!



சென்னை,ஜூன்.5-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**எங்கும் எப்போதும் நிரந்தரமென நிறைந்திருப்பது தலைவர் கலைஞரின் பெருமைகளே!**

**செம்மொழி நாளில் தலைவர் கலைஞர் வழியே தமிழினத்துக்கான கிழக்கு என உரக்க எடுத்துச் சொல்வோம்! வெல்வோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சீரிய திட்டங்களால்

# தமிழ்நாடு முழுவதும் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகரிப்பு!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தகவல்!

சென்னை, ஜூன் 5-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 02.06.2025 அன்று சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வில்லிங் டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 2025-26ஆம் ஆண்டிற்கான புதிய பாடநூல்கள். சீருடைகள், நோட்டு புத்தகங்கள் மற்றும் பிற கல்வி உபகரணப் பொருட்களை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி. இந்நிகழ்வினை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வின் இறுதியில் செய்தியாளர் சந்திப்பில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்ததாவது:-

2025-26ஆம் கல்வி ஆண்டிற்கான புதிய பாட நூல்கள், சீருடைகள், நோட்டுப் புத்தகங் கள் மற்றும் பிற கல்வி உபகரணப் பொருட்களை முதலமைச்சர் அவர்களே நேரடியாக சென்னை, திருவல்லிக்கேணி லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு வருகை தந்து ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவச் செல்வங்களுக்கு வழங்கி, திட்டத்தினை இன்று தொடங்கி வைத்தார்கள்.

ஒவ்வொருஆண்டும்ஏதோ ஒரு விதத்தில் 14 வகையான கல்வி உபகரணப் பொருட்களில் சில உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்க மூன்று அல்லது நான்கு மாதங்



கள் தாமதம் ஏற்படும். பள்ளி தொடங்கும் நாளிலேயே அனைத்து வகையான கல்வி உபகரணப் பொருட்களும் மாணவச் செல்வங்களுக்கு வழங்க வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்துதலின்படி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் சந்திர மோகன் வழிகாட்டு தலின் படி ரூபாய் 1141 கோடி மதிப்பீட்டில் சிறப்பாக இத்திட்டத்தினை செயல்படுத்தியுள்ளனர்.

முதலமைச்சர் எங்கள் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையின் அடிப்படையில், தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் முன்கூட்டியே ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, தர சோதனைகள் நடத்தி, பள்ளிக்கூடம் திறக்கும் நாளன்றே 100% மாணவச் செல்வங்களுக்கு தேவையான அனைத்துப் பொருட்களும் வழங்கப்பட்டு விடும் என பெருமையாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மேயர் சென்னை பெருநகர பட்ஜெட் கூட்டத் தொடரில் பல்வேறு அறிவிப்புகளை அறிவித்து செயல்படுத்தியதால் இந்தாண்டு சென்னை மாநகரப் பள்ளிகளில் மட்டும் 16000 புதிய மாணவர் சேர்க்கை நடைபெற்றுள்ளது. அதேபோன்று ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு முழுவதும் பள்ளிக் கல்வித்துறை சார்பாக முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்கள் கொண்டு வந்ததன் காரணமாக தொடர்ந்து மாணவச் செல்வங்களுடைய சேர்க்கை அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. அரசுப் பள்ளிகளில் இந்தாண்டு புதிய மாணவர் சேர்க்கை விவரங்கள் பின்னர் முழுமையாக தெரிவிக்கப்படும். முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு வழங்கக்கூடிய ஆக்கமும், ஊக்கமும் தான் இது போன்ற செயல்பாடுகளை நாங்கள் வெற்றிகரமாக செய்து முடிப்பதற்கு ஏதுவாக இருக்கின்றது.

தமிழ்நாடு அரசின் மூலமாக ஏற்கெனவே பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட RTE தொகையில் சுமார் ரூபாய் 600 கோடி நிலுவைத்தொகை இன்னும் ஒன்றிய அரசால் வழங்கப்படவில்லை. கடந்த மாதம் 16, 17 தேதிகளில் பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் ஆகியோர் நேரடியாக சென்று நிலுவைத் தொகையினை வழங்குமாறு வலியுறுத்தி வந்தனர். RTE நிலுவைத்தொகையினை ஒன்றிய அரசு வழங்காமல் இருப்பது இந்திய அரசியலமைப்பிற்கு எதிரானது என்பதால் இதுசார்ந்து மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு கழக ஆட்சி வந்ததில் இருந்து வாழ்வியல் திறன் சார்ந்திருக்கின்ற ஒரு புத்தகமும், ஒரு கைடும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்காக Moral Science சார்ந்த புத்தகமும் வழங்கப்பட்டுள்ளது. மாணவச் செல்வங்களை சிறந்த மனிதர்களாக்குவதில் ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் பங்குள்ளது. நமது பிள்ளைகளை நல்வழிப்படுத்துவது நம் ஒவ்வொருவரின் கடமை. நமது பிள்ளைகள் எப்படி சாதனை புரிந்து கொண்டிருக்கிறார்கள், ஒவ்வொரு விதத்திலும் அந்த சாதனைக்கு எப்படிப்பட்ட அங்கீகாரத்தை முதலமைச்சர் வழங்கி கொண்டிருக்கின்றார்கள் என்பதையெல்லாம் நாம் கண்கூடாக பார்க்க முடிகின்றது.

தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று பரவல் வீரியம் குறைந்தது பயப்படத் தேவையில்லை என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தெரிவித்தார். எனவே கவலைப்படாமல் இருங்கள் இயல்பான வாழ்க்கை வாழலாம்.

மேற்கண்டவாறு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.



மதுரை நீதிமன்றம் உட்பட 119 புதிய நீதிமன்றம் உருவாக்கியது மற்றும் மதுரை உயர்நீதிமன்ற கிளை அமைத்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை சிறப்பிக்கும் வகையிலும், முத்தமிழறிஞரின் செம்மொழி நாள் விழாவை முன்னிட்டு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளருமான பி.கே. சேகர்பாபு தலைமையில் நேற்று (4.6.2025), சென்னை உயர்நீதிமன்றம் எதிரிலுள்ள ஒய்.எம்.சி.ஏ. அரங்கத்தில் சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற மாபெரும் கருத்தரங்கத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி , மேயர் திருமதி.ஆர்.பிரியா , பாராளுமன்ற உறுப்பினரும் கழக சட்டத்துறை செயலாளருமான என்.ஆர்.இளங்கோ மற்றும் கழக சட்டத்துறை தலைவர் இரா.விடுதலை ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கே.எஸ்.இரவிச்சந்திரன், சட்டத் துறை துணைச் செயலாளர் கே.சந்துரு மற்றும் சட்டத்துறை இணை, துணை செயலாளர்கள், தலைமைக் கழக வழக்கறிஞர்கள் மற்றும் உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கழகத் தலைவர் எடுக்கும் முயற்சிக்கு ஆதரவாக சட்டத்துறை வெற்றி பெற்று வருகிறது!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேச்சு!

சிவகங்கை, ஜூன் 5-

சிவகங்கை ராமநாதபுரம் மாவட்ட கழக நிர்வாகிகள் ,ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், பி. எல். சி. டி .எல். சி. சி. எல். சி, டி. வி .ஐ . டி. எல் .சி, ஜி. எல். சி ,எ,ப் எல் .சி.மண்டலம் 2 ஆகியோர் அடங்கிய கூட்டம் சிவகங்கையில் உள்ள தனியார் மகாலில் சட்டத்துறை செயலாளர் என் .ஆர் .இளங்கோ எம்.பி .தலைமையில் ராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் காதர் பாட்ஷா என்ற முத்துராமலிங்க எம்.எல்.ஏ.முன்னிலையில் நடைபெற்றது.

சிவகங்கை மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் ர் எஸ் .பாஸ்கரன் வரவேற்றுப் பேசினார் .இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர்கே ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது:- கழகத்தில் பல்வேறு அணிகள் உள்ளன. இதில் சட்டத்துறை அணி களப்பணி ஆற்றி வருகிறது. சட்ட ரீதியாக பல்வேறு பணிகளை மேற்கொண்டு கழகத்திற்கு இன்னல்கள் வரும்போதெல்லாம் அதை வெற்றிகரமாக ஆக்கித் தருகிறது. பா.ஜ.க .அரசும் பிரதமர் மோடியும் கழக அரசுக்கு பல்வேறு வகையான இன்னல்களை தந்து வருகிறார்கள். இந்தியாவில் உள்ள பல்வேறு அரசியல் கட்சிகளை பிளவு



படுத்த பார்க்கிறார்கள். அவர்களை பலவீனப் படுத்துவதற்கு பல்வேறு இடையூறுகளை செய்து வருகிறார்கள். வருமான வரித்துறை, இடி ,போன்ற பல்வேறு துறைகளை ஏவி விட்டு குழப்பத்தை ஏற்படுத்துகிறார்கள். இதையெல்லாம் சட்டரீதியாக மேற்கொள்வதற்கு முதல்வர் தளபதி அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு சட்டத்துறை ஆதரவு தந்து வெற்றி பெற்று தருகிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில் இத்தகைய சட்டத்துறையில் போராடி வெற்றிபெறும் வகையில் எடுத்துக்காட்டாக நமது முதல்வர் விளங்கி வருகிறார். .சட்டத்திட்டத்திற்குட்பட்டு, சட்ட வரம்புகளுக்கு உட்பட்டு கழக தலைவர்அவர் கள் செயல் பட்டு வருகிறார்.

இதை பல்வேறு மாநில அரசியல் கட்சிதலைவர்கள் தளபதி அவர்களின் செயல்களை பார்த்து வியந்து பார்க்கிறார்கள். இத்தகைய செயல்பாடுகள் அவருக்கு எங்கிருந்து தோன்றுகிறது என்று கேட்கிறார்கள். அதற்கு காரணம் சட்டத்துறை கழகத்தலைவர் முதல்வர் தளபதி அவர்களுக்கு உற்ற துணையாக இருப்பதுதான் காரணம் ஆகும்.2026 சட்டமன்ற தேர்தல் பத்து மாதங்களில் வருகின்றது. எனவே தலைமைக் கழகம் என்ன கட்டளை இடுகிறதோ அதை நாம் நிறைவேற்றி தர வேண்டும். அதற்கு சட்டத்துறை மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் நாம் ஆதரவு தர வேண்டும். 75 ஆண்டுகளாக நம்முடைய கட்சி தமிழகத்தில் பல்வேறு வியத்தகு சாதனைகளை செய்து வருகிறது. இந்தியாவிற்கே ஒரு மாநில கட்சியான கழகம் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. தேர்தலுக்கான பல்வேறு பணிகளை சட்டரீதியாக வகுத்து தருகிறது .அதை நாம் அனைவரும் நிறைவேற்றி ஏழாவது முறையாக கழகம் ஆட்சி அமையு பாடுபடவேண்டும். முதல்வர் தளபதி அவர்கள் இரண்டாவது முறையாக முதல்வராக அமர்வதற்கு நாம் இப்பொழுது முதலே தேர்தல் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர்.பெரிய கருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மூ.தென்னவன், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி தமிழரசிரவிக்குமார், எஸ்.முருகேசன் மாவட்ட அவைத் தலைவர்கள் வழக்கறிஞர் அ.கணேசன், எஸ்.சத்தியமூர்த்தி, மாநில சட்டத்துறை இணைச் செயலாளர் கள் கே.எஸ்.ரவிச்சந்திரன், கே.எஸ்.ராதாகிருஷ்ணன், பச்சையப்பன், தலைமைக் கழக வழக்கறிஞர்கள் கே.ஜே.சரவணன், கலாநிதி, முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப.மதியரசன், எஸ்.மாரியப்பன் கென்னடி, வழக்கறிஞர்கள் ராஜாமுகமது, கணேசன், ஆதி அழகர்சாமி, சன் சிவகுமார், ஆர்.பிரபாகரன், முத்துராமலிங்கம் மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கை மாறன், திருமதி.ஜோன்ஸ்ருசோ, சிவகங்கை நகர்கழக செயலாளர் சி.எம்.துரை.ஆனந்த், மாவட்ட செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான் கான் ஒன்றிய துணைச் செயலாளர் எஸ். முத்துக்குமார் மற்றும் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் கள் கழக வழக்கறிஞர் கள் பாகமுகவர்கள் கலந்து கொண்டார்கள்.

ராமநாதபுரம் மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் கருணாநிதி நன்றி கூறினார். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை சிவகங்கை மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் எஸ். பாஸ்கரன் தலைமையில் வழக்கறிஞரணி நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.



தீவிரவாதத்தை எதிர்த்து போராடும் இந்தியாவின் முயற்சிகளுக்கு ரஷ்யா, ஸ்லோவேனியா, கிரீஸ், லாட்வியா, ஸ்பெயின் ஆகிய நாடுகள் முழு ஆதரவு அளிப்பதாக கனிமொழி கருணாநிதி தலைமையிலான எம்.பிக்கள் குழுவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினத்துடன் ஸ்பெயின் நாட்டில் கனிமொழி கருணாநிதி தலைமையிலான எம்.பி.க்கள் குழுவின் சுற்றுப்பயணம் நிறைவடைந்தது. இந்த நிலையில், நேற்று முன்தினம் (03.06.2025) சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு சென்னை திரும்பிய கனிமொழி கருணாநிதி எம்.பி.க்கு, தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளிட்டோர் விமான நிலையத்தில் பூங்கொத்து வழங்கி, மேளதாளம் ஒலிக்க உற்சாக வரவேற்பளித்தனர்.